4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை

சாட்சியின் சாட்சியம் திரு. **M.** நம்பிராஜன், பி.ஏ., பி.எல்., 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

அ.வ.எண். **326 /2023** நாள்: **24.07.2025** வா.சா.**1–** விஜயா

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, 4 மற்றும் 5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை -

எனது தாவா சொத்தை பொறுத்து 1 மற்றும் 2 பிரதிவாதிகள் 3 வது பிரதிவாதி வங்கியில் அடமான கடன் பெற்றது செல்லாது என்று அறிவிக்க கோரி இந்த வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன். என் கணவருக்கு நான் இரண்டாவது மனைவி. 1 மற்றும் 2 பிரதிவாதிகள் எனக்கு மகன் மற்றும் மருமகள் உறவு வேண்டும். மேற்படி 1ம் பிரதிவாதி என் கணவரின் முதல் மனைவி மூலமாக பிறந்தவர். தாவா சொத்தை 2017 ல் நான் கிரையம் வாங்கினேன். தாவா சொத்து வீடு. என் கணவர் காவல் துறையில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வந்தார். அவர் கொடுத்த வருமானத்தில் தான் நான் மேற்படி தாவா சொத்தை கிரையம் வாங்கினேன் என்றால் சரியல்ல. 07.06.2018 ல் நான் தாவா சொத்தை அடமானம் வைத்து கடன் வாங்க உடுமலைபேட்டை, சார் பதிவாளர் அலுவலகத்திற்கு அடமான பத்திரம் எழுதிக்கொடுக்க செல்லவில்லை. அடமான பத்திரம் எழுதிக்கொடுக்க சாட்சிகளை நான் அழைத்தே செல்லவில்லை. பொதுவாக ஒரு பத்திரத்தை எழுதிக்கொடுக்க செல்லும் போது சார் பதிவாளர் பத்திரத்தின் தன்மை என்ன, யாருக்கு எழுதி கொடுக்கிறீர்கள் என்ற விவரத்தை எழுதிக்கொடுப்பவரிடம் சொல்வார் என்றால் சாட்சி மேற்படி அடமான கடன் பத்திரம் சம்பந்தமாக சார் பதிவாளர் அலுவலத்திற்கு செல்லவில்லை என்று சாட்சி கூறுகிறார். மேற்படி தாவா சொத்து சம்பந்தமாக 3–ம் பிரதிவாதி வங்கிக்கு அடமான பத்திரம் எழுதிக்கொடுக்கசென்றேன் என்றும், வழக்கிற்காக உண்மைக்கு மாறாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

அடமான பத்திரத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது அல்ல. வழக்குரையில் உள்ளது என்னுடைய கையொப்பம் தான். மேற்படி இரண்டு கையொப்பங்களும் ஒன்றாக தான் உள்ளது. வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. சார் பதிவாளர் அலுவலகத்தில் அடமான பத்திரம் பதிவு செய்த விவரம் எனக்கு தெரியும், நான் உடன் சென்றேன் என்றும், வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய அடமான பத்திர்த்தில் என்னுடைய ஆதார் அட்டை நகல் எவ்வாறு சேர்க்கப்பட்டது என்று எனக்கு தெரியாது. 1 மற்றும் 2 பிரதிவாதிகளும், நானும் ஒன்றாக சேர்ந்து கொண்டு பெற்ற கடனை திருப்பி செலுத்தாமல் இருக்க ஏமாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் இந்த வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி அடமான பத்திரம் மோசடியாக தயாரிக்கப்பட்டது என்று நான் நடவடிக்கை எடுக்க மாவட்ட ஆட்சியர் மற்றும் போலிசாருக்கு மனு கொடுத்தேன். மேற்படி அடமான பத்திரத்தில் என் புகைப்படம் மற்றும் என்னுடைய கையொப்பம் உள்ளதால் நான் வழக்கிற்காக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

Sd/–M.Nambirajan.
4வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை.